DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No. 29/2024
P.W. 11

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. தனலெட்சுமி |
| Husband's Name | : | திரு.பாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 42 |

(Accused 1 and 2are present. Accused 3 and 4 are absent. Petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of June 2026.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருவெறும்பூர் சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியராக பணியில் இருக்கிறேன். கடந்த 09.02.2023 அன்று நான் மணப்பாறை வட்டாட்சியராக பணியில் இருந்த போது மணப்பாறை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் வேண்டுகோளுக்கு இணங்க வையம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 393/2022 வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் செல்வி, பாதிக்கப்பட்ட நபர்கள் சுப்ரமணி, சந்திரசேகர் மற்றும் பாஸ்கர் ஆகியோர்களுக்கும் வழக்கின் எதிரிகளான ஜெயராமன், நாகராஜ், பாப்பாத்தி மற்றும் சின்ன மணி ஆகியோர்களின் சாதிச்சான்று மெய்த்தன்மை சான்று விசாரணை செய்து வழங்கினேன். அதில் நிகழ்நிலை புகார்தாரர் செல்வி, பாதிக்கப்பட்ட நபர்கள் சுப்ரமணி, சந்திரசேகர் மற்றும் பாஸ்கர் ஆகியோர்கள் இந்து, பள்ளன் எனப்படும் பட்டியல் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும், வழக்கின் எதிரிகளான ஜெயராமன், நாகராஜ், பாப்பாத்தி மற்றும் சின்ன மணி ஆகியோர்கள் இந்து, கவரா நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் விசாரணையின் அடிப்படையில் குறிப்பிட்டு சாதிச்சான்று மெய்த்தன்மை சான்று செய்து வழங்கினேன். நான் வழங்கிய

சாதிச்சான்று மெய்த்தன்மை சான்று **அ.சா.ஆ. 6** ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Web Copy

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 29/2024**
**P.W.** 12

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ஆரோன்ஜென்மராகினி |
| Husband's Name | : | திரு. பாரதிநாதன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 51 |

(Accused 1 and 2are present. Accused 3 and 4 are absent. Petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of June 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது சமயபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 01.12.2022 அன்று வையம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது மணப்பாறை, பொத்தப்பட்டி, சாமியார் தோப்பை சேர்ந்த சுப்ரமணியன் மனைவி செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் 393/2022, பிரிவுகள் 294(b),323,506(i) IPC r/w 3(2)(va) of SC/ST Act ஆக வழக்கை பதிவு செய்தேன். அசல் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகாருடன் இணைத்து இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை விசாரணை அதிகாரியை நியமிக்க கேட்டு திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் அனுப்பி வைத்தேன். மணப்பாறை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

Web Copy

**<u>குறுக்கு விசாரணை</u>**

புகார்தாரர் காலதாமதமாக புகார் கொடுத்தது தொடர்பாக என்னிடம் எதுவும் சொல்லவில்லை. 29.11.2022, 30.11.2022 ஆகிய நாட்களில் வையம்பட்டி காவல் நிலையத்தின் நிலைய பொறுப்பு அதிகாரி யார் என்றால், அது வையம்பட்டி காவல் நிலையத்தில் தான் கேட்டு தெரிந்து கொள்ள முடியும். 29.11.2022 அன்று எதிரிகள் ஏதேனும் பாதுகாப்பு கேட்டு மனு கொடுத்தார்களா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. அன்றைய தினமே குற்ற எண்.392/2022 என எதிரிகள் கொடுத்த புகாரின் அடிப்படையில் நான் ஒரு குற்ற வழக்கு பதிவு செய்திருக்கிறேன் என்றால், நினைவு இல்லை.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Weprocopy